# யோவான் எழுதின சுவிசேஷம்

**முன்னுரை:**

யோவான் சுவிசேஷ புத்தகம், புதிய ஏற்பாட்டில் நான்காவது சுவிசேஷ புத்தகமாக அமைத்திருக்கிறது, மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா என்பவர்கள் தங்களுடைய சுவிசேஷ புத்தகங்களை எழுதிய பின்பே (கி.பி 50-65), யோவான் தன்னுடைய சுவிசேஷ புத்தகத்தை எழுதுகிறார் (கி. பி 80-95), மூன்று சுவிசேஷ புத்தகங்கள் இருக்கின்ற அதே வேளையில் ஏன்? இன்னொரு சுவிசேஷத்தை யோவான் எழுதுகிறார்! யோவான் எழுதின சுவிசேஷ புத்தகம் மற்ற மூன்று புத்தகங்களை விட வித்தியாசமாய் காணப்படுகிறது, மத்தேயு ,மாற்கு மற்றும் லூக்கா என்பவர்கள் தனிப்பட்ட சில ஜனங்களுக்காகவும், நபர்களுக்காகவும் எழுதியிருக்கிறார்கள், ஆனால் யோவான் உலக மக்கள் அனைவருக்காகவும் இந்த சுவிசேஷ புத்தகத்தை எழுதியிருக்கிறார், யோவான் இந்த சுவிசேஷத்தை எழுதிய போது கிறிஸ்தவம் அநேக நாடுகளில் பரவியிருந்தது, எனவே எல்லா மனிதர்களுக்காகவும் யோவான் இந்த புத்தகத்தை எழுதியிருக்கிறார்.

**ஆசிரியர் மற்றும் எழுதப்பட்ட காலம்:**

அப்போஸ்தலனாகிய யோவானே இந்த புத்தகத்தின் ஆசிரியராக இருக்கிறார், இவர் இயேசுவுக்கு அன்பின் சீஷனாக இருந்தார் (யோவா 21:24), யோவான் தாம் எழுதிய இந்த செய்திக்கு கண்ணால் கண்ட காட்சியாக இருந்தார் (1:14; 1 யோவா 1:3).

யோவான் என்றால் “யெகோவா கிருபையுள்ளவராய் இருந்திருக்கின்றார்” என்று அர்த்தப்படுகிறது. இவர் மீனவராக இருந்தார் (மாற் 1:19,20), சொந்த படகில் கூலிக்கு வேளையாட்களை வைத்து வேளை செய்தவர் (மாற் 1:19,20), இவர்களுடைய தொழில் கூட்டாளியாக பேதுரு மற்றும் அவனுடைய சகோதரனான அந்திரேயா இருந்தார்கள் (லூக் 5:10),இயேசுவின் சீஷனாக இருப்பதற்கு முன்பாக யோவான், யோவான் ஸ்நானகனின் சீஷனாக இருந்தார் (யோவா 1:35-40), பின்பு இயேசுவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் ஒருவராய் தெர்ந்தெடுக்கப்பட்டார் (மத் 10:2), இயேசுவோடு நெருக்கமான மூன்று சகோதரரில் ஒருவராக மாறினார் (மாற் 5:37; மாற் 9:2; மாற் 14:32,33), அன்பின் சீஷனாக இருந்தார் (யோவா 13:23,25; யோவா 20:2-6; யோவா 21:20,24), இயேசுவின் மரணத்திற்கு பின்பு மரியாளை பார்த்துக்கொள்ளும் பொறுப்பு இவரிடம் கொடுக்கப்பட்டது. (யோவா 19:25-27), அப்போஸ்தலர்களில் இளமையானவராக இருத்திருக்கலாம்.

யோவானிடம் குறைகள் இருந்தன, சகிப்பு தன்மை இல்லாதவராய் இருந்தார் (மாற் 9:38; லூக் 9:49), பழுவாங்கும் குணம் இருந்தது (லூக் 9:54); பதவி ஆசையுடையவராய் இருந்தார் (மாற் 10:35-27), ஆனாலும் யோவான் தன்னுடைய குறைகளை, மாற்றிக்கொண்டார் (வெளி 1:9), புதிய ஏற்பாட்டில் ஐந்து புத்தகத்தை எழுதினார், அப்போஸ்தலனாகவும், மூப்பராகவும் மாறினார் (3 யோவா 3:1), யோவான் தூணாக கருதப்பட்டார் (கலா 2:9). யோவான் இந்த புத்தகத்தை கி.பி 85-90 காலகட்டத்தில் எழுதியிருக்கலாம்,

**நோக்கம் மற்றும் மைய கருத்து:**

யோவான் புத்தகம் பரிசுத்த ஆவியானவரை பற்றி மற்ற சுவிசேஷ புத்தகங்களை விட அதிகமாக தகவல்களை நமக்கு கொடுக்கிறது (யோவா 14 – 17), ஜீவன், ஒளி, அன்பு, விசுவாசம் மற்றும் சத்தியம் போன்ற வார்த்தைகள் அதிகம் வருகிறதை நம்மல் பார்க்க முடிகிறது. இயேசு கிறிஸ்துவுக்கு பிதாவுக்கும் இருக்கிற உறவை பற்றி அதிகமாக பேசப்படுகிறது, பரலோக வாழ்வின் வழியாக இயேசு ஒருவரே இருக்கிறார், தேவ அன்பு இயேசுவின் மூலமாய் வெளிப்பட்டிருக்கிறது, கிருபையும் சத்தியமும் இயேசுவின் மூலமாய் வெளிப்பட்டது போன்ற காரியங்களை தன்னுடைய செய்தியாக கொண்டிருக்கிறது.

இந்த புத்தகத்தின் நோக்கமாக **“விசுவாசித்து, நித்திய ஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது”** என நாம் யோவா 20:30,31 -யில் நாம் பார்க்கிறோம். நாம் நித்திய ஜீவனை அடையும் படியாகவே இவைகள் எழுதப்பட்டிருக்கிறது, என்பதோடு இயேசு தேவனுடைய குமாரனாய் இருக்கிறார் (1:34) எனவும் இந்த புத்தகம் நமக்கு போதிக்கிறது. யோவான் 14:6 மைய வசனமாக இருக்கிறது.

யோவான் இயேசுவை வார்த்தையாக அறிமுகப்படுத்துகிறார், (யோவா 1:1), மற்ற சுவிசேஷ புத்தகத்தில் சொல்லப்படாதா அநேக காரியங்களை யோவான் பதிவு செய்கிறார், இயேசு தன்னுடைய ஆரம்ப காலத்தில் தன்னுடைய ஊழியத்தை யூதாவில் தொடங்கியது, நிக்கொதேமு மற்றும் சமாரிய பெண், லாசருவை உயிருடன் எழுப்புதல், சீஷர்களின் கால்களை கழுவுதல் போன்ற காரியங்களை பதிவு செய்கிறார்.

**புறக்குறிப்பு:**

1. அதிகாரம் ஒன்று
    a. வார்த்தையாகிய இயேசு (1:1-14)
    b. யோவான் ஸ்நானகனின் சாட்சி (1:15-34)
    c. இயேசுவின் முதல் ஐந்து சீஷர்கள் (1:35-50)
2. அதிகாரம் இரண்டு:
    a. இயேசுவின் முதல் அற்புதம் (2:1-11)
    b. காசுக்காரர்களையும் புறாவிற்கிறவர்களை துரத்திவிடுதல் ( 2:12-25)
3. அதிகாரம் மூன்று:
    a. நிக்கொதேமு மற்றும் இயேசுவும் (3:1-21)
    b. யோவான் ஸ்நானகன் இயேசுவை பற்றி சாட்சி கொடுத்தல் (3:22-36)
4. அதிகாரம் நான்கு;
    a. இயேசுவும், சமாரிய பெண்ணும் (4:1-28)
    b. இயேசுவும், சமாரிய ஊர் மக்கள் (4:29-44)

c. கப்பர்நகூமிலே ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரனை சுகப்படுத்தல் (4:45-54)

5. அதிகாரம் ஐந்து:
    a. பெதஸ்தா குளத்தில் இயேசு ஒரு மனிதனை சுகப்படுத்துதல் ( 5:1-15)
    b. பிதாவும், குமாரனாகிய இயேசுவும் (5:16-30)
    c. இயேசுவின் நான்கு சாட்சிகள் (5:31-47)
6. அதிகாரம் ஆறு:
    a. இரண்டு மீன்கள் மற்றும் ஐந்து அப்பங்கள் (6:1-15)
    b. வானத்திலிருந்து வந்த ஜீவ அப்பமாகிய இயேசு (6:16-71)
7. அதிகாரம் ஏழு:
    a. இயேசுவும், யூதர்களும் (7:1-36)
    b. ஜீவ தண்ணீருள்ள நதிகள் (7:37-52)
8. அதிகாரம் எட்டு:
    a. இயேசுவும் விபச்சார ஸ்திரியும் (8:1-11)
    b. ஒளியாகிய இயேசு (8:12-20)
    c. சத்தியம் மற்றும் பாவம் (8:21-51)
    d. இயேசு "நான் இருக்கிறேன்" (8:52-59)
9. அதிகாரம் ஒன்பது:
    a. இயேசு குருடனை சுகப்படுத்தல் (9:1-41)
10. அதிகாரம் பத்து:
    a. நானே நல்ல மேய்ப்பன் (10:1-22)
    b. நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் (10:23-42)
11. அதிகாரம் பதினொன்று:
    a. லாசருவை இயேசு உயிருடன் எழுப்புதல் (11:1-57)
12. அதிகாரம் பன்னிரண்டு:
    a. மரியாள் இயேசுவின் பாதங்களை கழுவுதல் (12:1-11)
    b. இயேசு கழுதை மீது ஏறிவருதல் (12:12-19)
    c. இயேசு பிதாவின் சித்தத்தின் செயல்படுதல் (12:20-50)
13. அதிகாரம் பதிமூன்று:
    a. இயேசு சீஷர்களின் கால்களை கழுவுதல் (13:1-17)
    b. இயேசு தன்னை காட்டிக்கொடுப்பவனையும், மறுதலிப்பவனையும் பற்றி கூறுதல் (13:18-38)
14. அதிகாரம் பதினான்கு:
    a. நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் (14:1-11)
    b. ஏழு வாக்குத்தத்தங்கள் (14:12-31)

15. அதிகாரம் பதினைந்து:
    a. நானே மெய்யான திராட்சச்செடி (15:1-10)
    b. தான் பிதாவிடம் செல்வதை சீஷர்களுக்கு அறிவித்தல், ஆயத்தமாக்குதல் (15:11-27 )
16. அதிகாரம் பதினாறு:
    a. தேற்றரவாளனைப் பற்றி வாக்குத்தத்தம் (16:1-33)
17. அதிகாரம் பதினேழு:
    a. இயேசுவின் ஜெபம் (17:1-26)
18. அதிகாரம் பதினெட்டு:
    a. இயேசுவை பிடித்தல், பேதுரு மறுதலிப்பு (18:1-27)
    b. இயேசுவும் பிலாத்தும் (18:28-40)
19. அதிகாரம் பத்தொன்பது:
    a. இயேசுவின் பாடு , மரணம் மற்றும் அடக்கம்  (19:1-42)
20. அதிகாரம் இருபது:
    a. இயேசு உயிர்தெழுதல் (20:1-24)
    b. தோமாவின் அவிவிசுவாசம் (20:25-31)
21. அதிகாரம் இருபதொன்று:
    a. இயேசுவும் பேதுருவும் (21:1-19)
    b. இயேசுவும் அன்பின் சீஷனும் ( 21:20-25)